**கிழக்கு மாகாண சபை - 2022ஆம் ஆண்டு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின்உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) பிரிவில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பறிக்கை 2023 செப்டம்பர் 15 வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கிழக்குமாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றினையும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்குரிய நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வருடாந்த வருமானம் ரூபா 578,303,671 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களில் அவ்வருமானம் ரூபா 576,933,764 ஆக காண்பிக்கப்பட்டு இருந்ததால் நிதியத்திற்குரிய நிதிக்கூற்றுக்களில் அவ்வருமானம் ரூபா 1,369,907 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்கான காரணமாக புள்ளி விபரவியல் கையேட்டின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 நாளாந்த கூட்டுத்தொகை 2021 இல் வருமானமாக கவனித்த போதும், சில பிரிவுகளில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நாளாந்த கூட்டுத்தொகை 2022 சனவரி 01 ஆம் திகதி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த நிறுவனங்களின் வருமான பதிவேடுகளின் பிரகாரம் ஆண்டிற்கான வருமான இனங்காணலை உறுதி செய்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முதலமைச்சினால் மாகாண விஷேட அபிவிருத்தி கொடையாக ரூபா 20,613,654 மாகாண சுற்றுலா பணியகத்திற்கு மற்றும் வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களினால் ரூபா 915,654 மீண்டெழும் செலவிற்காக செலவிட்டிருந்த போதும் அவற்றை மீளாய்வாண்டில் மூலதன செலவாக நிதிய கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகிறேன் | PSDG நிதியத்தை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டியதுடன் இந்த நிதியத்தை மீண்டெழும் செலவிற்காக பயன்படுத்த முடியாது. |
| (இ) | மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 20,940,000 பெறுமதியான ஐந்து (05) வாகனங்களின் பெறுமதி ரூபா 13,350,000 ஆக நிதி நிலைமை கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதனால், அத் திணைக்களத்தின் மற்றும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்கள் ரூபா 7,590,000 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் 8 வாகனங்கள் காணப்படுகின்றன. 5 வாகனங்கள் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதியிடப்பட்டுள்ளன. 03 வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியாண்டு இறுதியில் நிதியல்லா சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்கள் ஊடாக காண்பிக்க வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாகாண கல்வி திணைக்களத்தின் நிதி நிலைமை கூற்றில், நிதியல்லா சொத்துக்களின் கீழ் ரூபா 1,035,651,703 பூர்த்தியாகாத வேலைகளின் மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டினுள் அப் பெறுமானத்தை மூலதனமாக்கி அல்லது நிதியல்லா சொத்துக்களிற்காக மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தின் கீழ் எடுத்திருக்காததால், பூர்த்தியாகாத வேலைகளின் ஆரம்ப மீதி மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் இத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | ஆரம்ப மீதிகளை எதிர்வரும் ஆண்டிற்கு கொண்டு செல்லும் போது அவற்றை சரியாக ஒப்பாய்வு செய்ய வேண்டும். |
| (உ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் நிர்வாக பிரிவினால் கணக்காய்விற்காக சமர்ப்பித்துள்ள வாகன பட்டியலின் பிரகாரம் அந்த வாகனங்களின் மொத்த பெறுமதி ரூபா 38,792,400 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தின் மற்றும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இப் பெறுமதி ரூபா 24,415,000 ஆக காண்பித்திருந்ததில், இவ் இரண்டு | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் உண்மையான மற்றும் நியாயமான தன்மைகளை காண்பிப்பதற்காக வாகனங்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானங்களிற்கிடையில் ரூபா 14,377,400 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஊ) | மாகாண சபையின் நிதி செயலாற்றுகை கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள மற்றும் மாகாண சபைக்குரிய ஒவ்வொரு அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் சமர்ப்பித்துள்ள நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கணக்காய்வின் போது கணக்கிடப்பட்ட மீண்டெழும் செலவின 03 உருப்படிக்கள் மற்றும் மொத்த செலவுகளிற்கு இடையில் முறையே மூலதன ரூபா 1,781,626 ஆன மற்றும் ரூபா 92,661,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மாகாண திறைசேரியின் ஒவ்வொரு செலவின தலைப்புக்களையும் இணைத்து தயாரிக்கப்பட்டுள்ள மாதாந்த கணக்குப் பொழிப்பின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீண்டெழும் மற்றும் மூலதன தேவைப்பாட்டுகளிற்கான செலவுகள் சரியானதாகும். | விலகல்களிற்கான காரணத்தை இனங்கண்டு அவற்றை சரிசெய்ய வேண்டும். |
| (எ) | மாகாண சபையின் நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்படும் மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள், மத்திய அரசின் 321 தலைப்பின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள செலவுகளுடன் இணக்கஞ் செய்கையில் முறையே ரூபர் 34,301.11 மில்லியன் மற்றும் ரூபா 31,614.59 மில்லியனான விளக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.<br><br>விபரம் பின்வருமாறு. | பதில் வழங்கப்படவில்லை. | விலகல்களிற்கான காரணத்தை இனங்கண்டு அவற்றை சரிசெய்ய வேண்டும். |

| விபரம் | நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப் படும் பெறுமதி | தலைப்பு 321 இன் கீழ் குறிப்பிடப்படும் பெறுமதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் செலவு | 32,666.38 | 29,963.79 | 2,702.59 |
| மூலதன செலவு | 1,634.73 | 1,650.80 | (16.07) |
| மொத்த செலவு | 34,301.11 | 31,614.59 | 2,686.52 |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | காணி உரிமையை பெற்றுக் கொள்ளாது பிரதான செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் காணியின் பெறுமதி ரூபா 20,800,368 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | செலவு விடய இலக்கம் 6111107 இன் கீழ் 2022 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறிப்பிடப்படுவது பிரதம | உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் உரிமைய |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தின் காணிப் பெறுமதியான ரூபா 20,800,368 மாத்திரம் ஆவதுடன் எமது நிதிக்கூற்றுக்களில் காணி பெறுமதி உள்ளடக்கப்படாததுடன், அதற்கு காரணமாகவது காணி உரிமை ''மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், திருகோணமலை'' எனும் பெயரில் காணப்படுவதாகும்.<br><br>எவ்வாறாயினும்,''பிரதம செயலாளர், பிரதம செயலகம், கிழக்கு மாகாணம்'' எனும் பெயருக்கு உரிமையை ஒப்படைக்க நாம் செயற்பட்டுள்ளதுடன் 2023 நிதிக்கூற்றுக்களால் உள்ளீர்ப்பு செய்ய வேண்டிய செயன்முறையையும் ஆரம்பித்துள்ளதாக அறிக்கிறேன். | பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவற்றின் நிகழ்கால பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (ஐ) | கூட்டுத் தொகை ரூபா 1,484,819,222 ஆன சொத்து உருப்படி நான்கிற்குரிய விரிவான அட்டணை, மதிப்பீட்டறிக்கை மற்றும் பண்டக கணிப்பீட்டுச் சபை அறிக்கை போன்ற எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததுடன் மூன்று மாவட்ட அலுவலகங்கள் உள்ளடங்களாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளரினால் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்குரிய வரி பட்டியல் மற்றும் பற்றுச் சீட்டும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | (i)-(iv) ACA-06 படிவம் ஊடாக நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள அனைத்து சொத்துக்களும் 2022 கணப்பீட்டு சபை அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சொத்துக்களின பெறுமதியை உட்படுத்த கணிப்பீட்டு அறிக்கையில் ஏற்பாடு அல்லது இடம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. நிகழ்காலத்தில் DSC (நிதி) இனால் சொத்துக்கள் முகாமைத்துவ தொகுதி (AMS) மென்பொருன் ஊடாக எமது புத்தகங்களின் பிரகாரம் உரித்தாகும் அனைத்து சொத்துக்களையும் பெறுமானமிட மற்றும் உட்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் அனைத்து சொத்துக்களினதும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களிற்கு சொத்துக்களின் பெறுமானத்தை உட்படுத்தும் போது அதற்கான மூல ஆவண தகவல்களை உறுதி செய்து கொள்ள வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க, உண்மையாகவும் நியாயமான நிலைமையை பிரதிபழக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்கிய உரிய நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளது என நியாயமான உறுதியொன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயரிய மட்டத்திலான சான்றுப்படுத்தலான போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எச்சந்தர்ப்பத்திலும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்பதற்கான சான்றுப்படுத்தல் அல்ல. மோசடி மற்றும் தவறுகளின் தனிப்பட்ட அல்லது கூட்டு மொத்தமான தாக்கத்தின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதன் பாவனையாளர்களால் பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

என்னால் உயர் தொழில் தீர்ப்புக்கள் மற்றும் உயர்தொழில் ஐயப்பாட்டுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் அச்சுறுத்தலை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தினை தவிர்ப்பதற்கு, போதியளவான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடியினால்

ஏற்படும் தாக்கமானது பாரதூரமானது என்பதுடன், கூட்டுச்சதி, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விடுவித்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை புறக்கணித்தல் ஆகியன மோசடி நேர்வதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மாகாண சபையின் உள்ளகக்கட்டுப்பாடு கவனத்திற் கொள்ளப்படுகின்ற போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பான அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன், அதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்,

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு – 910 முதலமைச்சரின் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கைக்கு புறம்பாக ஒரு தகவல் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆகியோரை மேலதிகமாக ஆட்சேர்த்து இருந்ததுடன் மீளாயவாண்டில் அவர்களுக்கு படிகளாக ரூபா 10,771,404 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அங்கீகார ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிகமாக ஈடுபடுத்தியிருந்ததுடன் ரூபா 1,121,470 தொகை சம்பளமாக அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கிழக்கு மாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது, குறிப்பாக தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் மொழிபெயர்ப்பு ஆளணியினர் எண்ணிக்கை இணைப்பது தொடர்பாக, அவர்கள் பிரதிப் பிரதம செயலாளர் ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகத்திற்கு மற்றும் பிரதம செயலாளர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளனர். பின்னர், பிரதி பிரதம செயலாளர் ஆளணி மற்றும் பயிற்சி | ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்காக தேவையான தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கி அதற்காக அங்கீகாரத்தை பெற்று ஊழயர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அலுவலகத்தினால் இந்த ஆளணி அங்கத்தவர்களை அவர்களின் சேவை தேவையான பொருத்தமான நிலையங்களிற்கு பொறுப்புடன் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த இணைத்தலின் பிரதிபலனாக, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் மற்றும் மொழிபெயர்பாளர் ஒருவரும் எமது அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களிற்கு ஒப்படைத்துள்ள கடமை பணிகளின் மீது அவர்களின் சம்பளம் உரியவாறு இந்த அமைச்சினால் செலுத்தப்படுகின்றது. | |

**1.5.2 தலைப்பு – 912 – கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வேலையற்ற 995 இளைஞர் யுவதிகளுக்கு புடவை நெய்தல், தும்பு,தச்சுத் தொழில், பட்பாண்டம், தோல் பண்டங்கள், மின் தொழில்நுட்ப கலைஞர், பதிக் மற்றும் உடை தைத்தல் ஆகிய நடவடிக்கைகளை பயிற்றுவிக்க திணைக்களத்திற்கு சந்தர்ப்பம் உள்ள போதும், மீளாய்வாண்டினுள் பயிற்சி நிகழ்சித் திட்டங்களிற்காக 358 பயிலுனர்களை மாத்திரம் திணைக்களம் தெரிவு செய்திருந்தது. அதற்கிடையில் 201 பயிலுனர்கள் பாடநெரிகளை பூர்த்தி செய்துள்ளதுடன், 43 சதவீதம் அதாவது 157 பயிலுனர்கள் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். | கிராமிய பிரதேசங்களின் பல சமூகங்களிலிருந்து வருகின்ற பயிலுனர்கள் உள்ளனர். நாம் அவர்களிற்காக தொடர்ச்சியான பயிற்சியை வழங்கிய போதும் இன்று இளைஞர் யுவதிகள் பயிற்சிகளிலிருந்து விலகுவது தமது தனிப்படட் விருப்பு மற்றும் உள்நாட்டு உற்பத்திகளை கற்பதில் உள்ள ஊக்கக் குறைவின் மீதாகும். இதனை தவிர்க்க நாம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தும் அவற்றை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. பயிலுனர்களுக்கு படிகள் வழங்கப்படுவது அவர்களின் வரவு 80% ஆனால் | செயலாற்றுகை மேம்படும் வகையில் பயிற்றுவிப்பதனை ஆக்கபூர்வமாக மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாத்தரமே. மேலும் அவர்களின் படிகளை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வழங்குவதுடன் இறுதி மாதாந்த படிகளை வழங்குவது பரீட்சைக்கு சமுகமளித்தால் மாத்திரம் ஆகையால் வித்தியாசம் ஓரளவிற்கு மட்டுப்படுகிறது. எவ்வாறாயினும், எமது பயிலுனர்கள், முதன்மையாக பெண்கள் தலைமைத்துவ குடும்ப மற்றும் கிராமிய பிரதேசங்களில் அடிப்படை சீவனோபாயமொன்றை தேடும் பாடசாலையை விட்டுச் சென்றவர்களாகும். அவ்வாறே அவர்களிற்கு வழங்கப்படும் நாட் படி அவர்களின் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்கான படியாகும். அவ்வாறான படியை வழங்குவது அவர்கள் வருகின்ற காலத்திற்கு மாத்திரமாகும். அவ்வாறே அவர்கள் கிராமிய பிரதேசங்களிற்கு வருகை தராதமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது சமூகங்களிற்கு இடையில் பல பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அறிவிக்கிறேன். | |

### 1.5.3 தலைப்பு – 920 – பிரதம செயலாளர் அலுவலகம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | விரல் அடையாள இயந்திரத்தின் வரவு அறிக்கையின் அடிப்படையில் கடமை நேரத்தை உறுதி செய்து கொண்டு விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செய்ய வேண்டும். அவ்வாறாயினும், பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மீளாய்வாண்டில்விரல் அடையாள இயந்திரத்தின் பிரகாரம் வரவு மற்றும் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைகளை குறைத்துக் கொள்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிச் செல்லலை உறுதி செய்து கொள்ளாது கூட்டுத்தொகை ரூபா 2,459 மில்லியனானவிடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கருத்திட்டமொன்றின் விடய பரப்பினுள் திட்டமிட்ட செலவொன்று அங்கு காணப்படும் ஏதேனும் செலவின குறியீட்டிற்கு பொருந்தாதெனில் மற்றும் அவ்வாறான ஒரு செலவு விடய குறியீடு அல்லது சில குறியீடுகளின் கீழ் குறித்துரைத்த மீதி இருந்தால், பிரதம செயலாளர் நியம செலவின விடய குறியீட்டு பட்டியலுடன் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளிற்காக புதிய செலவின விடய குறியீடொன்றை உருவாக்க அங்கீகாரம் வழங்க முடியும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, மாகாண விளையாட்டு திணைக்களம் மற்றும் மாகாண கல்வி திணைக்களத்தினால் புதிய செலவின விடய குறியீடுகளை உருவாக்கி குறைநிரப்பு ஏற்பாடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அச் செலவு விடய குறியீட்டின் கீழ் ரூபா 354,912 (ஐ.அ.டொ 960) ஆன தொகையொன்றை வெளிநாட்டு பிரயாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | மீண்டெழும் மற்றும் மூலதன செலவிற்காக புதிய செலவின விடய குறியீட்டு இலக்கம் உருவாக்கப்பட்டுள்ளது வெளிநாட்டு சுற்றுலா தவிர காணப்படும் செலவு விடய குறியீட்டு இலக்க விபரங்களிலிருந்து மாற்றப்பட்ட அனைத்து செலவு விடய குறியீட்டு இலக்கம் மற்றும் ஏற்பாடுகளிற்காக நியம செலவு விடய குறியீட்டு இலக்க பட்டியலினுள் ஆகும்.<br><br>வெளிநாட்டு பிரயாண செலவு விடய குறியீட்டு இலக்கம் உருவாக்கப்பட்டு குறைநிரப்பு ஏற்பாடு செய்யப்பட்டது அந்த கொடுப்பனவு செய்யும் உரிய அதிகாரத்தினை உறுதி செய்தல் மற்றும் வெளிநாட்டு பிரயாண செலவிற்காக ஒருமுகப்படுத்தப்பட்ட தகவல்களை பேணிச் செல்வதன் காரணமாகும். | மாகாண நிதிப் பிரமாணங்களிற்கு இணங்கியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கிழக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்கள், செயலகங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பவற்றிற்கு உரியதான 81 காணிகள், 98 வாகனங்கள், 71 மோட்டார் சைக்கிள்கள், 97 அரச உத்தியோகபூர்வ இல்லங்கள், 28 அலுவலக கட்டிடங்கள், 02 வாடிவீடுகள் மற்றும் 51 நீர்பாசன குளங்களை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்காததுடன் மேலே உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வாடிவீடு அமைந்துள்ள காணிகளின் உறுதி, நிலஅளவை திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு | விவசாய வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை பெறுமானமிட தேவையான நடவடிக்கை எடுத்து வருவதுடன் அவை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்படும். இதற்காக கோரிக்கை விடுத்து மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எமது தகவல்களின் | நிதியல்லா அனைத்து சொத்துக்களையும் தாமதமின்றி பெறுமானமிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. | பிரகாரம் 10 பட்டியற்படுத்தப்பட் இல்லங்கள், 20 குடும்ப உத்தியோகபூர்வ இல்லங்கள், 1 சிரேஸ்ட உத்தியோகத்தர் இல்லம் மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் இருதரப்பினரிற்கும் 03 இல்லங்கள் உள்ளடங்களாக உத்தியோகபூர்வ இல்ல வகையின் கீழ் சமஅளவான 34 வளவுகள் எமது விடய எல்லைக்கு உரித்தாகின்றன. மேற்குறிப்பிட்ட வளவு பட்டியலிற்கிடையில் பட்டியலிடப்பட்ட 10 உத்தியோகபூர்வ இல்லங்கள் திணைக்களத்தினால் மதிப்பீட்டிற்குட்படுத்தி உள்ளதுடன் அதனை மதிப்பிடும் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மதிப்பீட்டு செயன்முறைக்கு உட்பட்ட நிலஅளவை திட்டமொன்று உடமையில் வைத்துக் கொள்ள குறித்த பிரதேச செயலாளரிற்கு நாம் கடிதம் அனுப்பியுள்ளோம். | |
| (ஈ) | சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைக்காக ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களிற்காக ரூபா 57,786,846 ஆன தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பாக குறித்த சேவை வழங்கும் நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்தியிருந்த போதும், இந்த பங்களிப்புத் தொகை குறித்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதா என உறுதி செய்து கொள்ள எவ்வித சான்றுகளையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. மேலும் மேற்குறித்த பங்களிப்புத் தொகையின் மீது கணக்கிடப்பட்ட ரூபா 6,304,937 ஆன பெறுமதி சேர் வரி அந்த நிறுவனத்திற்கு | ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை பிரகாரம் செலுத்திய மொத்த சம்பளப் பெறுமதியின் மீது பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரால் இத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரரினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும்ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தியுள்ளதற்கான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க மாகாணசபை வேண்டப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | முறையற்றதாக செலுத்தி இருந்த போதும் அம் முறையற்ற கொடுப்பனவை இது வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பொறுப்பு நிதியம் மீது செலுத்தியுள்ள பெறுமதி சேர் வரியை மீள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | உலக வங்கி உதவியின் மீது நிர்மாணிக்கப்பட்ட மள்வது சுரிபொடெய் பாதையில் (0+360 மற்றும் 2+920) பாலங்கள்02 நிர்மாணித்தமை தொடர்பில் ஏற்பட்ட பிணக்கை தீர்ப்பதற்காக 2021 ஆண்டின் இறுதிப் பகுதியில் மாகாண சபையினால் ரூபா 150 மில்லியன் நட்டஈடுத் தொகையை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் காரணங்களினால் ஒப்பந்ததாரருக்கு செலுத்திய நட்டஈட்டுத் தொகை அரசிற்கு ஏற்படுத்திய நட்டமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ரூபா 150 மில்லியனான பிணக்கு தீர்ப்பு நட்டஈடு செலுத்த அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றை தயாரித்து தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பிணக்கு தீர்ப்பிற்கு போதிய நட்டஈட்டுத் தொகை இருப்பின் மாகாண சபை நிதியத்திலிருந்து அதனை செலுத்துமாறு தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. | இக் கொடுப்பனவிற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்காததுடன் மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (i) | நியாய சபை செயன்முறையின் போது நட்டஈடாக ரூபா 40 மில்லியன் மற்றும் மாகாண சபையினால் ஒப்பந்ததாரரிடம் இருந்து தற்போது அறவிட்டிருந்த மேலும் ரூபா 37.8 மில்லியன் உள்ள தாமதக் கட்டணத்தை மீள்செலுத்துவதால் இப் பிணைக்கை தீர்ப்பதற்கு இணங்கியிருந்த போதும், நியாய சபையினால் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் திருப்தியடைய முடியாதென தெரிவித்து பிரதம செயலாளர் பிணக்குத் தீர்ப்பு செயன்முறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதன் பின்னர் பிணக்குத் தீர்ப்பு சபை வழங்கிய தீர்பின் பிரகாரம் இந்த பிணக்கை தீர்ப்பதற்கு மாகாண சபையினால் ரூபா 150 மில்லியன் தொகையை நட்டஈடாக செலுத்த கட்டளை இடப்பட்டிருந்தது. அதன் விளைவாக ரூபா 72.2 மில்லியன் நட்டமொன்று மாகாண சபைக்கு ஏற்பட்டிருந்தது. | | |

| | | |
|---|---|---|
| (ii) முறையே, தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உதவி செயலாளரினால் அனுப்பிய 2019 ஏப்ரல் 09 திகதிய இலக்கம் BD/GPS/321/02/02 கொண்ட மற்றும் 2021 சனவரி 22 திகதிய இலக்கம் PL/05/04/PRP(WB)/Eastern/2015-Vol1 கொண்ட கடிதங்களின் பிரகாரம்,ரூபா 150,000,000 நட்டஈடுத் தொகையை செலுத்த முன்னர் அமைச்சரவை தீர்மானத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு பெற்றுக் கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் பல திணைக்களங்களிற்கு உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டு இருந்த போதும், அவ் அலுவலர்களின் உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் மாகாண சபையின் திணைக்கள தலைவர்களிற்கு செய்யப்பட்ட பரிந்துரைகள் கணக்காய்விற் சமர்பிக்கப்படவில்லை. | இது வரை பதில் வழங்காத நிறுவன தலைவர்களிற்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் உள்ளிட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை தேசிய கணக்காய்விற்கு எதிர்காலத்தில் பெற்றுத்தரப்படும். 2023 ஆண்டின் இரண்டாம் காலாண்டு முதல் நாம் அறிக்கையின் பிரதியொன்றை அரச கணக்காய்விற்கு அவதானத்திற்காக அனுப்புகிறோம்.<br><br>எவ்வாறாயினும், 2022 ஆண்டில் பொத்துவில் நீர்பாசன பொறியியல் அலுவலகத்தில் மற்றும் செங்கலடி நீர்பாசன பொறியியல் அலுவலகத்தில் மற்றும் குச்சவெளி மற்றும் திருகோணமலை நீர்பாசன பொறியியல் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வு நடாத்தி அறிக்கை அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன். | உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அவர்களின் பரிந்துரைகள் கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

### 1.5.4 தலைப்பு – 921 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிதி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையினால் ரூபா 1.2 மில்லியன் செலவில் சொத்துக்கள் முகாமைத்துவ தொகுதியொன்றை (AMS) ஸ்தாபித்திருந்த போதும், கடந்த 02 வருடங்களினுள் இத் தொகுதியை நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. அதனால் மாகாண சபைக்கு சொத்துக்கள் முகாமைத்துவத்தை வினைத்திறனாக செய்து கொள்ள முடியாதிருந்தது. | கடந்த 02 வருட காலத்தினுள் தொகுதியை மேம்படுத்த வருடாந்த கட்டணம் செலுத்தாததால்,AMS தொகுதி கைவிடப்பட்டது. அதனால் தரவுத் தொகுதி நாளாதுவரையாகவில்லை. எனினும், நாம் இவ்வாண்டு தொகுதியை செயற்படுத்த மீண்டும் ஆரம்பித்துள்ளதுடன் பயிற்சி அமர்வு 2023 ஜுலை 26 ஆம் திகதி செயற்படுத்தப்பட்டது. அதனால், எதிர்வரும் ஆண்டுகளில் முன்னரைப் போன்று தரவுகள் நாளாதுவரையாக்கப்படும். | தரவுகளை நாளாது வரையாக்க தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும் மற்றும் அதனை ஏனைய மாகாணங்களை போன்று CIGAS புதிய பதிப்புடன் ஒன்றிணைக்க வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் அனைத்து திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களினால் மீளாய்வாண்டிற்காக CIGAS மென்பொருள் தொகுதியை பயன்பாட்டால் உருவாக்கும் பரீட்சை மீதி தயாரித்து சமர்பிக்கப்படவில்லை. | கிழக்கு மாகாணத்தில் அனைத் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மாதாந்த கணக்கு பொழிப்பை தயாரிப்பதற்காக புதிய CIGAS 2.3.0 மென்பொருளை பயன்படுத்துவதுடன் அதனை 2022 சனவரி முதல் மாகாண திறைசேரியிலும் பயன்படுகிறது.<br><br>2022.05.02 திகதிய PT/07/2022 சுற்றறிக்கை மூலம் அனைத்து நிறுவனங்களிற்கும் பரீட்சை மீதிகளையும் தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்குமாறு மேலதிக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அதற்கு 2.3.0 தழுவலினால் 2022 ஆண்டிற்காக இணைந்த பரீட்சை மீதியை பெற்றுக் கொள்ள முடியவில்லை. மேலும், தற்போது நாம் புதிய CIGASதழுவலிற்குவெற்றிகரமாக நாளாதுவரையாக்கி உள்ளதுடன் எதிர்காலத்தில் CIGAS தொகுதியினுடாகவும் அது பெற்றுக் கொள்ளப்படும். | CIGAS மென்பொருளின் புதிய தழுவலொன்றை ஸ்தாபித்து எதிர்வரும் ஆண்டில் பரீட்சை மீதியை தயாரிக்க தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிழக்கு மாகாணத்தில் 2008 இலக்கம் 01 கொண்ட நிதிப் பிரகடனத்தின் 89(1) பிரிவின் பிரகாரம் முத்திரை கட்டணத்தை செலுத்த மறுக்கும் நபரிற்கு எதிராக மாகாண வருமான ஆணையாளரினால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறாயினும், 2014 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் இது வரை அவ்வாறான நபர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திரு வீ.மஹேந்திரநாதன் அவர்கள் கிழக்கு மாகாண வருமான திணைக்களத்தின் ஆணையாளராக 2020.11.05 திகதி நியமிக்கப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் வெளியிட பின்வரும் தேவையான செயற்பாடுகள எடுக்கப்பட்டுள்ளது.<br><br>(அ) ஆரம்பமாக நாம் வர்த்தமானியை மும்மொழிகளிலும் தயாரித்து 2022.09.01 திகதி அங்கீகாரத்தை/ விருப்பை பெற்றுக் கொள்ள கிழக்கு மாகாண மதிப்பிற்குரிய ஆளுனரிற்கு கிழக்கு மாகாண பிரதான செயலாளர் ஊடாக அனுப்பப்பட்டது.<br><br>(ஆ)கிழக்கு மாகாண ஆளுனர் செயலத்திலிருந்து அங்கீகாரத்துடனான கடிதம் கிடைத்ததுடன் 2023.06.12 திகதி கிழக்கு மாகாண மாகாண சட்ட அலகினால் மேற்கொண்ட சட்ட அவதானிப்பின் பிரகாரம் சீராக்கம் செய்யுமாறு காட்டப்பட்டுள்ளது.<br><br>(இ) மாகாண சட்ட அலகினால் 06.07.2023 திகதி மேற்கொள்ளப்பட்ட சட்ட அவதானிப்பின் பிரகாரம் சீராக்கம் செய்த பின்னர் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மேலும் தாமதமின்றி அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 முதல் 2022 ஆண்டு வரை கொடுப்பனவை புறுக்கனித்தவர்களிடம் இருந்து முத்திரைக் கட்டணத்தை அறவிடும் செயன்முறையை வினைத்திறனாக மேற்கொண்டிருக்காத போதும் மாகாண வருமான திணைக்களத்தினால் அதற்குரிய அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு படியாக ரூபா 11,188,360 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அலுவலக வருமான சேவை ஊழயர் எண்ணிக்கையில் சில பற்றாக்குறை / வெற்றிடம் காணப்பட்ட போதும் கடமைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுவதுடன் முத்திரைக் கட்டணம் சேகரித்தல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு பணம் மீண்டும் வழங்கும் போது அலுவலகம் பின்வருமாறு குத்தகை சேகரிக்கும் இலக்குகளை அடைந்துள்ளது. | சொத்துக்களை மாற்றுபவரினால் முத்திரைக் கட்டணம் செலுத்துவதால் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். எவ்வாறாயினும், தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திலிருந்து பெற வேண்டிய சேமிப்பை வருமான அலுவலரினால் சேகரிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | year Target(Mn) Achievement<br>2019 360 469,216,920.35<br>2020 337.5 449,580,571.00<br>2021 500 714,810,468.50<br>2022 550 828,752,253.58<br><br>அதன் பிரகாரம், ஆளணியினரிற்கு அவர்களின் ஊக்குவிப்பை பெற்றுக் கொள்ள உரிமை உள்ளதுடன், அதனூடாக எதிர்காலத்திலும் திணைக்களத்தின் இலக்குகளை அடைந்து கொள்ள அனைத்து ஆனணியினரின் வேலை செய்யும் இயலுமை மேம்படுத்தப்படும். | அதனால் மீண்டும் வரி சேகரிப்பதனை அதிகரிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (உ) | 2008 இன் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண நிதி பிரகடனத்தின் 88.2 மற்றும் 89.1 பிரிவுகளினால் மாகாண வருமான திணைக்களத்தின் ஆணையாளரிற்கு ஒப்படைத்திருந்த கடமை எதுவும் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | 2012 ஆண்டில் முன்னால் ஆணையாளர் திரு செல்வனாயகம் அவர்கள் ஓய்வு செய்ய பின்னர் திரு எம்.அய்.எம். மஹீர் அவர்கள் 2014.02.01 திகதி முதல் 2021.07.31 வரை பதிற்கடமை பிரதி ஆணையாளராக பணியாற்றியதுடன், 2008 இன் 01 ஆம்இலக்க கிழக்கு மாகாண நிதி பிரகடனத்தின் 88 மற்றும் 89.1 பிரிவுகளின் பிரகாரம் ஆணையாளரிற்கு மேற் குறித்த கடமைக்காக அதிகாரம் அழிக்கப்பட்டுள்ளது. அதனால் 2013.01.01 முதல் 2020.01.04 வரையான காலத்தினுள் ஆணையாளரிற்கு ஒப்படைத்துள்ள கடமைகளை பூர்த்தி செய்யப்படவில்லை. முத்திரைக் கட்டணம் செலுத்துவதை மறுக்கும் நபரிற்கு / குத்தகை செலுத்துபவரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் பிரசுரிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலும் தாமதமின்றி அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கிழக்கு மாகாண சபையின் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் 08 இற்குரிய அரச அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய முற்பணக் கணக்கு மீதி ரூபா 16.86 மில்லியனை 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிட்டிருக்கவில்லை. | ரூபா 143,926.00 ஆன் நிலுவை இடர் கடன் மீதியை திருமதி அய்.நலாயினி அவர்களினால் செலுத்தவுள்ள மீதியென உங்களிற்கு அறிவிப்பதுடன் அவர் 2008.09.29 திகதி பதிவியை விட்டுச் சென்றுள்ளார். நாம் பல முறை எழுத்துமூலம் அறிவித்ததன் பின்னர் அவரின் தாயாரான திருமதி | நிலுவை மீதியை கூடிய விரைவில் குறித்த அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அய்.வல்லியம்மா இனால் 2019 ஆம் ஆண்டில் ரூபா 15,000.00 தொகை செலுத்தப்பட்டுள்ளது. ரூபா 129,757.51 ஆன் எஞ்சிய மீதி மீண்டும் அறவிட முடியாத தொகையொன்றாகும். நாம் அய்.வல்லியம்மா அவர்களை தொடர்புபடித்திக் கொண்டதுடன் எதிர்வரும் ஆகஸ்ட்/ செப்டம்பரில் நிலுவை கடனை செலுத்த உடன்பட்டார். திருமதி அய்.நலாயினி அவர்கள் செலுத்த தவரினால் கிழக்கு மாகாண சபையின் பிரதான சட்ட அலுவலருடன் கலந்துரையாடி அவரிடமிருந்து அறவிட வேண்டிய கடனை மீள் அறவிட பின்னூட்டல் செயற்பாடுகளை நாம் ஆரம்பிப்போம். அம்மிடம் ரூபா 165,848.75 ஆன மேலும் தீர்க்கப்படாத இரண்டு கடன் மீதிகள் காணப்படுவதுடன் பதிவை இனங்காண தேர்த்தல் ஆணையாளரிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இடமாற்றம் பெற்ற அலுவலர்களிடமிருந்து இடர் கடன் தவணைத் தொகை தொடர்ந்தும் எமக்கு கிடைக்கிறது. கன்தளாய் பிரதேச சபையினால் அந்த கடன் மீதியை ரூபா 1,102,903.93 இலிருந்த ரூபா 951,513.40 வரை குறைத்துள்ளது. மூன்று அங்கத்தவர்கள் பூரணமாக செலுத்தியுள்ளனர். | |
| (எ) | மாகாண சபையினால் 2018 சனவரி முதல் மூன்று நடைமுறை வங்கிக் கணக்குகளில் அன்னளவாக ரூபா 414 மில்லியனான மீதியை எவ்வித நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தாது விளைவற்று இருந்ததுடன் 2022 திசெம்பர் மாத இருதியளவில் அது ரூபா 639.59 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேற்படி 2018 சனவரி 2022 திசெம்பர் வரையான காலத்தினுள் வங்கி நடைமுறை கணக்குகளில் பணம் செயலற்று நிலவுவதற்கு இடமளித்ததால் அரசிற்கு மொத்தமாக ரூபா 281.16 மில்லியனான நிதி நட்டமொன்று ஏற்பட்டுள்ளது. | முத்திரை கட்டண வருமானத்தை சேகரிப்பதற்காக பேணிச் செல்லப்படும் இந்த இரண்டு வங்கிக் கணக்குகளும் சேமிப்புக் கணக்குகளே அன்றி நடைமுறைக் கணக்குகள் அல்ல. இந்த சேமிப்பு கணக்குகளில் 2018 முதல் 2022 வரையான காலத்தினுள் ரூபா 100 மில்லியனிற்கு அதிக வட்டியொன்று ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2023.04.11 திகதி இதற்காக புதிதாக நிலையான வைப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் இது வரை ரூபா 21 மில்லியனான வட்டி எமக்கு கிடைத்துள்ளது. | மாகாண சபையிடம் காணப்படும் பணம் வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.5.5 **தலைப்பு – 923 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையை தீர்மானிப்பதற்கு முன்னர் பிரதான மதிப்பீட்டு உத்தியோகத்தரின் மதிப்பீட்டறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், 10 ஆண்டுகளிற்கு முன்னர் பெற்றுக் கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 66 உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக தொடர்ந்தும் சிக்கன வாடகை அறவிடப்பட்டு வருகின்றது. | 2018 – 2020 ஆண்டு ஆரம்பித்து 2021 – 2023 வரையான கால எல்லைக்காக ஆளணி உத்தியோகபூர்வ இல்லங்களிற்கு சிக்கன வாடகை மதிப்பீட்டை மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் வாடகை அறிக்கை 03 ஆண்டுகளிற்காக வலுப்பெறுகின்றது. மதிப்பிடப்பட்ட மாதாத வாடகை அடிப்படையில், செயலாளர்களிடமிருந்து தவிர 5.8 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது அறவிடப்படுகிறது. 2021 – 2023 ஆண்டிற்காக உத்தேச வாடகை கட்டண பிரகாரம் நாம் அறவிடுகிறோம். அவ்வாறே கிழக்கு மாகாண ஆளுனர் செயலகத்தில் 2019 ஜுலை 17 திகதிய இலக்கம் G/EPC/C/19/Qu கொண்ட கடிதமும் கவனத்திற் கொள்ளப்படும். அனைத்து செயலாளர்கள் மற்றும் பிரதி பிரதான செயலாளர்களின் வாடகை கட்டணம் திருத்திய ரூபா 1000/= ஆக மாற்றப்படுவதுடன் அந்த குடியிறுப்பாளரின் பாவனை பட்டியல்களில் இருந்து 50% மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பிரதானிகளிற்காக புதிய மாதாந்த வாடகையை அறவிட நாம் கவனித்திற் | எதிர்காலத்தில் ஒவ்வொறு அலுவலர்களிடமிருந்தும் குறித்த வாடகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வதுடன் முன்நடவடிக்கைகளுக்காக அக் கடிதத்தை பிரதான செயலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

### 1.5.6 தலைப்பு – 924 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - பொறியியல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாணத்திற்கு உரித்தற்ற அம்பாறை கலாச்சார அரங்கு மற்றும் அம்மாறை மாவட்ட செயலக விடுதிக்காக பிரதி பிரதான செயலாளர் அலுவலகம் - பொறியில் பிரிவினால் ரூபா 15,000,000 ஆன தொகையை செலவிட்டிருந்ததுடன் அந்த செலவினமும் நிதியக் கணக்கில் மூலதன செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண சபையின் விடய பரப்பிற்கு உரித்தற்ற பணிகளிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவாக இங்கு அவதானிக்கப்பட்டது. | அம்பாறை கலாச்சார அரங்கு மற்றும் அம்மாறை மாவட்ட செயலக இல்லம் பிரதான செயலாளரின் அங்கீகாரத்துடன் கிழக்கு மாகாண சபையின் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் மறுசீரமைக்கப்பட்டது. | செலவின வகைப்படுத்தல் உரிய ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கொள்கைக்கு இணங்கியதாக இருக்க வேண்டும். |
| (ஆ) | 04 மாடிகளுடன் கூடிய கட்டிடத்திற்காக அலுமினியம் பொருத்துத்துதல், நீர் இணைப்பு, மின்சாரம் வழங்கல் மற்றும் இறுதி நிர்மாணம் மற்றும் ஆளி அறையை பொருத்துதல் போன்ற நடவடிக்கைகளிற்காகபிரதி பிரதம செயலாளர் செயலக பொறியியல் பிரிவின் ஊடாக ரூபா 17,175,995 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2023 மே 10 கணக்காய்வு திகதியளவிலும் அவற்றை திணைக்கள அலுவலக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி இருக்கவில்லை. | நான்கு மாடி அலுவலக கட்டிடத்தின் தரை மாடி மற்றும் முதலாம் மாடி 2023 ஆகஸ்ட் 15 அல்லது அதற்கு முன்னர் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பூர்த்தியாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | சொத்துக்களை செயலற்று வைத்திருக்காது ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**1.5.7 தலைப்பு – 927 – மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட விஷேட மதிப்பீட்டு சபையின் மூலம் ரூபா 2,359,800 பெறுமதியான 12 மோட்டார் வாகனங்களை அகற்ற பரிந்துரைத்திருந்த போதும், 2023 அளவிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தது. | 12 மோட்டார் வாகனங்களிற்காக 2023/06/07 திகதிய இலக்கம் EP/12/13/004/Veh.Auction/ 2023 எனும் கடிதம் மூலம் உரிமையின் பெயரை மாற்ற அல்லது வெளிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் 10 வாகனங்களை கறைநிரற்பட்டியற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் 2 வாகனங்களின் உரிமையை அவரின் 2023.07.24 திகதிய இலக்கம் EP/DNT/CMSO/General(Vehicle)2023 கொண்ட கடிதத்தின் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது. | மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட விசேட மதிப்பீட்டுக் சபையின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.8தலைப்பு – 930– விவசாய அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2022 ஆண்டினுள் ‘‘நிலைபேறான விவசாய கலாசாரம்’’ சேதன பசளை விவசாய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ISO நியமத்துடன் கூடிய இரசாயன கூடமொன்றை நிர்மாணிக்க மற்றும் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வழங்க மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு ரூபா 200 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 4.5 மில்லியன் மாத்திரம் மேற்குறிப்பிட்ட | சேதன பசளை, மண் மற்றும் சேதன உற்பத்தி பகுப்பாய்வு செய்ய நவீன இரசாயன கூடமொன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இது தொடர்பாக கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் நியதிச் சட்ட நிறுவனமொன்றான தொழில்நுட்ப நிறுவனத்திற்கு | அங்கீகார நிதியத்தை ஆக்கபூர்வமாக மற்றும் வினைத்திறனாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்த போதும் அவற்றால் அமைச்சிற்கு எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. | அந்த இரசாயன கூடத்தை அமைக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ள நெல் விற்பனை சபையுடன் ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. சேதன விவசாயம் தொடர்பாக அரச கொள்கை மாற்றமடைந்ததன் மீது அதற்காக காணப்படும் கேள்வி குறையுமென எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறான நிலைமையின் கீழ் கருத்திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், விதைகளை பரிசோதிக்கும் வசதிகளை ஸ்தாபிப்பதற்காக முன்செல்ல நாம் திட்டமிட்டுள்ளதுடன், அதற்காக விவசாய திணைக்களத்தின் கட்டிடத்தை மறுசீரமைத்து தேவையான இரசாயன கூட உபகரணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றோம். | |
| (ஆ) | இயற்கை சேதனை பசளை உற்பத்திற்காக விவசாய திணைக்களத்தினால் 2021 ஆண்டின் போது ரூபா 35,348,600 ஆன பெறுமதிக்கு 60 புல் வெட்டும் இயந்திரங்களை கொள்வனவு செய்து கிழக்கு மாகாணத்தில் 60 நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2023 ஏப்பிரல் 30 கணக்காய்வு திகதி வரையும் அவ் இயந்திரங்களை செயற்படுத்துவதற்காக நான்கு சில்லு டெக்டர் ஒன்று இல்லாததததனால இயந்திரங்களின் 50 சதவீதம் எதிர்பார்த்த வேலைக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நிலவிய அரச சேதன விவசாயக் கொள்கையை கைவிட முன்னர் அறிவிக்கப்பட்ட இந்த இயந்திரத்திற்காக கமநல சமூகத்திலிருந்து கேள்வி குறைவடைந்தது. அதனால் இந்த இயந்திர உபகரணங்கள் 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறான நிலைமையின் கீழ் பயன்பாட்டிற்கு எடுக்காத இயந்திர உபகரணங்களை மீண்டும் மாகாண சபைக்கு பெற்றுக் கொண்டு அந்த இயந்திரங்களின் பெறுமதியில் 50 சதவீதத்தை கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்திற்கு செலுத்தும் மற்றும் எஞ்சிய 50 சதவீதத்தை மாதாந்த | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள தேவையான மேலதிக உபகரணங்களை கொள்வனவு செய்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தவணைகளாக செலுத்தும் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | |
| (இ) | மாகாணத்தில வெற்றிகரமாக செயற்படும் கமநல சமூகத்திற்கு பரிசில் வழங்கும் நோக்கில் மாகாண விவசாய திணைக்களத்தினால் ரொடர்வேடர் உடன்கூடிய 32 கைடெக்கடர்களை ரூபா 14,816,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2023 ஏப்ரல் 30 கணக்காய்வு திகதி வரையும் வெற்றிகரமான கமநல சமூகத்தை தெரிவு செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த டெக்டர்கள் 01 ஆண்டிற்கு அதிக காலமாக விளைவற்று நிலவின. | இதனூடாக கமநல சங்கங்களை ஊக்குவிக்க திட்டமிட்டிருந்த போதும் ஈருருளி டெக்டர்கள் கிடைக்கும் போது பெறும் போகம் முடிவடைந்திருந்தது. அதனால் திட்டமிட்டவாறு இந்த வேலைகளை மேற்கொண்டு செல்ல முடியவில்லை. | ஒதுக்கிய நிதியத்திலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.9 தலைப்பு – 931 – விவசாயத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டினுள் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரூபா 30 மில்லியன் தொகை விவசாய திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதும், அவற்றில் ரூபா 21,934,350 தொகை 2023 ஏப்ரல் 17 திகதி வரையும் மேற்குறித்த பணிக்காக பயன்படுத்தி இருக்கவில்லை. | இந்த கொள்வனவிற்காக விலை கோரி கொள்வனவுக் கட்டளையும் விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும் covid தொற்று மற்றும் நாட்டில் நிலவிய டொலர் பற்றாக்குறை காரணமாக மற்றும் பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்ததன் மீது குறித்த வழங்குனரிற்கு பொருட்களை இறக்குமதி செய்து வழங்க இயலாது போனது. | இந் நிதியத்தை குறித்தொதுக்கிய நோக்கத்திற்காக காலரீதியாக ஈடுபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ‘‘நிலைபேறான விவசாய கலாசாரம்’’சேதன விவசாய நிகழ்சித் திட்டத்தின் கீழ் ஏனைய களப் பயிர்களிற்காக (OFC) விதை களஞ்சியத்தை அபிவிருத்தி செய்ய ரூபா 30 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2023 மார்ச் 31 கணக்காய்வு திகதியளவிலும் மாகாண விவசாய திணைக்களத்தினால் அந்த பணிகள் | இந்த நிதியானது எமது திணைக்களத்திற்கு சிறிய வெங்காய பயிர்ச் செய்கைக்காக தெரிகருவி மற்றும் சோள விதைகளை கொள்வனவு செய்ய ஒதுக்கப்பட்டது. இந்த கொள்வனவிற்காக கேள்வி விலை கோரி, பெறுகைகள் தீர்மானம் எடுத்து,கொள்வனவு கட்டளையும் எமது | அங்கீகரிக்கப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாக மற்றும் வினைதிறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பித்திருக்கவில்லை. | திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும்,Covid-19 தொற்று காரணமாக நாட்டினுள் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறை மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பண்டங்களின் விலையின் பாரிய அதிகரிப்பு மற்றும் அதன் காரணமாக மற்றும் நாட்டில் விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி மட்டுப்படுத்தலின் காரணமாக குறித்த வழங்குனரிற்கு பண்டங்களை இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்க முடியாமல் போனது. | |
| (இ) | தரமான பரம்பரை விதை நெல் உற்பத்தி கருத்திட்டத்தின் கீழ் ரூபா 33,748,615 பெறுமதியான விதை நெல் கிலோகிராம் 156,035 கொள்வனவு செய்யும் போது மாகாண விவசாயத் திணைக்களத்தினால் பெறுகை வழிகாட்டி 3.2 மற்றும் 3.3 பிரகாரம் தேசிய போட்டி கேள்வி விலை கோரல் அல்லது தேசிய மட்டுப்படுத்தப்பட்டு கேள்வி விலை கோரல் நடைமுறையை பின்பற்றி இருக்கவில்லை. இதனால் நிதிசார் அதிக நலன்கள் மற்றும் தரமான நல்ல வழங்கல்களை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் திணைக்களத்திற்கு இழக்கப்பட்டு இருந்தது. மேலும், வழங்குனரிற்கு கொடுப்பனவு செய்யும் போது உறுதிச்சீட்டுகளிற்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியல்களின் பிரகாரம்,ரூபா 2.6 மில்லியன் பெறுமதிற்கு 14,124 கிலோ கிராம் நெல் விதைகளை வழங்குவதற்காக வழங்குனரின் பெயராக மோட்டார் வாகன உபகரண மற்றும் கட்டிடப் பொருட்களி விற்பனை நிறுவனமொன்றின் பெயர் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன்அவ்வாறான நிறுவனம் ஒன்று அந்த விலாசத்தில் இருக்கவில்லையென பௌதீக பரீட்சித்தலின் போதுஉறுதியானது. | விதைகளை கொள்வனவு செய்ய முன்னர் பரம்பரை விதை நெல் வழங்க இணங்கியவர்களின் விதை நெல் தொடர்பாக பிரதேச விவசாய ஆலோசகர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கை பிரகாரம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினாரல் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை பிரகாரம் மாத்திரம் இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டது. | நாட்டிற்று உச்ச பொருளாதார சாதகம் மற்றும் தரத்தில் உச்ச உற்பத்தியொன்று பெற்றுக் கொள்ள முடியுமானவுறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.10 தலைப்பு– 941 – கல்வி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திருகோணமலை மாவட்டத்தில் தேசிய பாடசாலையொன்றின் வளவில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கெமராவில் பதிவான காட்சிகள் வலய கல்வி பணிப்பாளரினால் தனிப்பட்ட காரணத்தினால் வலயத்திற்கு பொறுப்பான தகவல் தொழிநுட்ப அலுவலரின் உதவியுடன் அழித்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி செயலாளர் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளரினால் முறையான செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கல்வி அமைச்சின் அலுவலர்களினால் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளரின் கருத்தின் பிரகாரம் 03 அலுவலர்கள் வேறு நிறுவனங்களிற்கு இடமாற்றப்பட்டுள்ளனர். | சட்ட ஏற்பாடுகளிற்கு கீழ்படிய அலுவலரிற்கு பொறுப்பொன்று காணப்பட வேண்டும். சுயாதீனமாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிலோ மீற்றர் 39,083 பயணிப்பதற்கான காரணம், நோக்கம் மற்றும் பயணித்த அலுவலர்களின் பெயர் மற்றும் பதவிகளை மாகாண கல்வி அமைச்சு மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் பொறியில் சேவை அலுவலகத்தினால் தயாரித்திருந்த ஓட்டக் குறிப்புக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. மேலும், தின ஓட்டக் குறிப்பு, மேற்பார்வை அலுவலரினால் தொடர்ந்து பரீட்சித்திருக்கவில்லை. அதனால் அந்த வாகனம் கடமை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா என கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | ஆளணியினரால் தொகுதி வாகனங்கள் உத்தியோக கடமைகளிற்கு பயன்படுத்தப்படுகிறது. மாவட்டத்தினுள் உத்தியோககடமைகளிற்காக வாகனங்களை பயன்படுத்தும் போது, அது பொதுவாக ஒட்டக் குறிப்பில் உட்படுத்தி வாகனத்தை பயன்படுத்துவதற்கான காரணம் வாகனத்தை பயன்படுத்திய ஆளணியினரும் ஒட்டக் குறிப்பில் கையொப்பமிட்டுள்ளனர். அதற்கிடையில் மாவட்டத்திற்கு வெளியில் பயணிப்பதற்கு கடமையின் தன்மை மற்றும் பயணிக்கும் நோக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பத்தில் உரிய அங்கீகாரத்தை ஆளணியினரால் உரிய முறையூடாக பெறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சாரதிகளினால் இந்த தகவல்களை ஒட்டக் குறிப்பிற்கு உட்படுத்தாதது அவர்களிற்கு இது தொடர்பாக | குறித்த அமைச்சு மற்றும் திணைக்களம் பயன்படுத்தும் வாகனங்களை பரீட்சித்து மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவில்லாததால் ஆகும். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் மீண்டும் இடம்பெற மாட்டாது. ஒட்டக் குறிப்பு உரியவாறு பராமரிக்கப்பட்டுள்ளதுடன் மேற்பார்வை அலுவலரினால் தொடர்ந்தும் பரீட்சிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | தேசிய பாடசாலைகளில் நிர்மாணப் பணிகளிற்கு ரூபா 12,941,083 செலவில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டு இருந்ததுடன் இந்த வேலைப்பணிகள் 2021 ஆகஸ்ட் 05 முதல் 2021 திசெம்பர் 04 வரையான காலத்தினுள் பூர்த்தி செய்யப்படவிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரையும் ரூபா 5,918,864 செலுத்தி இருந்த போதும் 50 சதவீத வேலைகள்மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாக மற்றும் வினைதிறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.11 தலைப்பு– 951 – சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட தகவல்களில் பிரகாரம், கிழக்கு மாகாணத்தில் 507 தனியார் மருத்துவ நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவ்வாறாயினும், தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு சபையின் (இணையத்தளம்) பதிவு செய்திருந்தது 38 தனியார் மருத்துவ நிறுவனங்கள் மாத்திரமாகும். அதன் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யாததால் 2022 திசெம்பர் 31 திகதியன்றுரூபா 5,295,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | தற்போது நாம் 68 தனியார் சுகாதார நிறுவனங்களை பதிவு செய்துள்ளோம். தற்போது பதிவிற்காக விண்ணப்பம் இணையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அனைத்து நிறுவனங்களுக்கும் நிகழ்நிலை முறையூடாக அறிவுறுத்தப்பட்டன. கிடைத்த விண்ணப்பங்களின் அடிப்படையில் பதிவு செய்யும் செயற்பாடு மேற்கொள்ளப்படும். | மருத்துவ நிறுவனங்களை மேலும் தாமதிக்காது தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு சபையில் பதிவு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2018 ஆண்டில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனங்களில் GPS பின் தொடர் தொகுதி ஒன்றின் கீழ் Mobile M – Track | வாகனங்களின் போக்கு வரத்து மற்றும் கிரயத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் | இந்த உபகரணங்களை உரிய பணிக்களிற்கு பயன்படுத்தியதற்கான போதிய தகவல்கள் கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | solution GPS தொகுதியை 102 வாகனங்களுக்கு தொடர்பு படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இது தொடர்பாக குறித்த மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான சான்றுகளில்லாது 2018 - 2022 காலத்தினுள் ரூபா 2,157,040 ஆன தொகையை தொகுதி இயக்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அவர்களிற்குரியது என மட்டக்களப்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மருத்துவ வழங்கல்களிற்காக ரூபா 48,000,000 மாத்திரம் வழங்கப்பட்டிருக்கையில் அதற்காக ரூபா 64,341,596 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு ஏற்பாட்டை விஞ்சி ரூபா 16,341,596 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக மாகாண நிதிப்பிரமாணம் 65.1 பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | “முதலாவது, குறித்துரைத்த காலத்தினுள் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்ய ஒதுக்கிய பாதீட்டிற்கு அப்பால் சென்றதாக நாம் ஏற்றுக் கொள்கிறோம். பணவீக்கம் காரணமாக மருத்துவ வழங்கல்களின் விலைகள் திடீரென அதிகரித்தமை உள்ளிட்ட எதிர்பாரா நிலைமை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டது. இந்த மேலதிக கொள்வனவுகளிற்கு அடிப்படையான காரணமாவது அவசர நோயாளர்களின் வருகைக்காக அத்தியாவசிய மருத்துவ வழங்கல்களின் அவசர தேவைப்பாடகும். பொதுவாக நாம் மருந்துகளை கொள்வனவு செய்வது ஆண்டின் காலாண்டிற்காகும். அதனால் 2022 ஆண்டில் நாம் மருந்துகள் கூட்டுத்தாபனத்தினால் ஆயர்வேத மருந்துகளின் விலையை அதிகரித்தது இரு தடவைகள் மாத்திரமே.<br><br>எமது முன்னுரிமை எந்த நேரமும் நோயாளிகளின் பாதுகாப்பாவதால் அதிகரிக்கும் கேள்வியை நிவர்த்திக்க மேலதிக | மாகாண நிதிப்பிரமாணம் 65.1 பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கல்களை கொள்வனவு செய்ய நாம் தீர்மானித்தோம். மேலும், இந் நிலைமையை தவிர்க்க நாம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.'' | |
| (ஈ) | மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 81,698,727 ஆன செலவில் நிர்மாணித்திருந்த அட்டாலைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் மாகப்பேறு வாட்டு, தொழிலாளர் அறை, சிறுவர் வாட்டு,ETU மற்றும் OPD கட்டிடத்தின் நிர்மாணப்பணிகளை 2021 மே 17 திகதி பூர்த்தி செய்து சுகாதாரத் திணைக்களத்திற்கு ஒப்படைத்திருந்த போதும், இவ்வறிக்கை திகதி வரையும் 02 ஆண்டுகளுக்கு அதிக காலமாக கட்டிடத் தொகுதியை பயன்படுத்தாது விளைவற்ற வைத்திருக்க இடமளிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடு போதாமையினால் இந்த கட்டிட நிர்மாணங்களை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதுடன் அரசியல் மாற்றம் மற்றும் **covid** தொற்று நிலைமை காரணமாக தாமதமொன்று ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட விரும்புகிறோம். இதனால் கருத்திட்டத்தை ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு செயற்படுத்த முடியாது போனது. | நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்து கட்டிடத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2018 முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் மாகாண உயிரியல் மருத்துவ பொறியியல் அலகிற்கு கிடைத்திருந்த ரூபா 25,461,600 பெறுமதியான 51 மருத்துவ உபகரணங்கள் திருத்த வேலைகளிற்காக சேவை வழங்குனரிற்கு விநியோகித்திருந்த போதும், இவ் அறிக்கை விநியோகிக்கும் திகதி வரையும் அவ்வுபகரணங்களின் திருத்த வேலைகளை பூர்த்தி செய்து மீண்டும் பெற்றிருக்கவில்லை. | உதிரிப்பாகங்கள் இல்லாமை மற்றும் உதிரிப்பாகங்களின் அதிகரித்த விலை காரணமாக இத் தாமதத்திற்கு காரணமாகவுள்ளது. பகுதிகளை மாற்றீடு செய்து ஒன்றை திருத்த முடியமாகையால் சில போது அரைவாசி பழுதடைந்த வரும் வரை உபகரணத்தை வைத்துக் கொள்ளப்படும். தற்போது திருத்திய அனைத்து உபகரணங்களும் மீண்டும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. | சொத்துக்களை செயலற்று வைத்துக் கொள்ளாது ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஊ) | மட்டக்களப்பு உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,842,000 பெறுமதியான 6 வகையான 114 வைத்திய உபகரணங்கள் குறித்த | Cholesterol meter திருத்தப்படுகின்றசந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கென இந்த மானியை வைத்துள்ளதுடன் அவசர | வழங்கியுள்ள உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளிற்கு வழங்கப்படாது மேற்குறித்த அலகினுடைய பகுதி களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. | தேவைப்பாட்டிற்காக அவை பிரயோசனப்படுத்தப்படும்.<br><br>Hematology Analyzer வாகரை பிராந்திய வைத்தியசாலையில் இஸ்தாபித்துள்ளது. ஒரு microscope உபகரணமொன்று கரடியனாறு மாவட்ட வைத்தியசாலையிற்கு விநியோகித்துள்ளதுடன் ஏனையவைகள் அவசர தேவைப்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. Sphygmomanometer உபகரணத்தில் திட்டவட்டமான இருப்பு அளவை ஒன்று பேணிச்செல்ல வேண்டியதால் அவ்வாறு இருப்பு பேணிச்செல்லப்படுகிறது. | |
| (எ) | Defibrillator, Multipara Monitor, Transport Ventilator, Optiflow Nasal Oxygen Therapy மற்றும் Fingertip – pulse Oximeter போன்ற 34 மருத்துவ உபகரணங்கள் கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் 2 ஆண்டுகள் முதல் 4 வரையான ஆண்டு காலத்தினுள் எதிர்பார்த்த பணிக்காக பயன்படுத்தாது செயலற்று இடப்பட்டிருந்தன. | கிண்ணியா ஆதார வைத்தியசாலை 146 கட்டில்களின்கூடிய வாட்டுகள்,HDU, ETU, அறுவை சிகிச்சை மற்றும் பிரசவ வாட்டுபோன்றவற்றுடன்கூடி யதானதுடன் பெறும் அளவானோரிற்கு அங்கு சுகாதார சேவையை வழங்கப்படுகிறது.<br><br>சுகாதார திட்டமிடல் அலகொன்றாக, சகல சுகாதார நிறுவனமொன்றிலும் இந்த உபகரணம் அதன் கொள்ளளவின் பிரகாரம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம் இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் 07 வகை பட்டியலிடப்பட்ட 17 | வழங்கியுள்ள உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மருத்துவ உபகரணங்கள் பொது களஞ்சியத்தில் இருக்கவில்லை. இந்த அனைத்து உபகரணங்கள் வைத்தியசாலைகளில் சேவை பகிரும் அலகுகளிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவைகள் பயன்படுத்துவதற்காக விசேட அலகுகளில் உள்ளன. DMO யினால் சமர்ப்பித்திருந்த பயன்பாட்டு விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. | |
| (ஐ) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் உத்தியோகபூர்வ இல்லம் திருத்தத்திற்காக ரூபா 3,012,505 ஆன மொத்த தொகையொன்று செலவிட்டிருந்த போதும், அந்த உத்தியோகபூர்வ இல்லம் விளைவற்று காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்களை விளைவற்றதாக வைத்துக் கொள்ளாது ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஒ) | கணக்காய்விற்கு வழங்கியிருந்த தகவல்கள் பிரகாரம் ரூபா 40,950,000 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் குறித்த பெறுமதியற்ற 05 வாகனங்கள் உள்ளிட்ட 11 வாகனங்கள் 05 வருடங்களுக்கு அதிகமான பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் திருத்த முடியுமான நிலையில் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2023 ஏப்ரல் 24 ஆம் கணக்காய்வு திகதி வரையும் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | இந்த வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.12 தலைப்பு– 961 – வீதி அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தங்களில் கால எல்லைகள், இயந்திரங்களை சட்டவிரோத செயலுக்காக பயன்படுத்தப்படுவது எனின் திணைக்களத்தின் பொறுப்பு வாடகையாளரிற்கு ஒப்படைக்கும் ஏற்பாடு, | இயந்திர உபகரண அலகில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஒப்பந்த உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகள் | ஒப்பந்த நிருவாக அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் அடிக்கடி மீளாய்வு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | தாமத கொடுப்பனவு தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் நாளாந்த மற்றும் மாதாந்த பகிர்வின் போது பேணிச்செல்ல வேண்டிய குறித்த நேரங்கள் போன்ற உடன்படிக்கை பிரிவுகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் இயந்திர பிரிவுகளில் ஒப்பந்த உடன்படிக்கைகளிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்றினால் சரி செய்துள்ளதுடன் புதிய ஒப்பந்த உடன்படிக்கை திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கல்முனை பிரதேச அலுவலகங்களினால் தற்போது பயன்படுத்தப்படுகிறது. | வேண்டியதுடன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள பலவீனங்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திருகோணமலை இயந்திர உபகரண பிரிவிற்கு சொந்தமான ரூபா 33,600,000 பெறுமதியான 02 டோசர் இயந்திரங்கள் வெளித் தரப்பினரில் பொறுப்பில் இருந்ததாக களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் ரூபா 16,800,000 பெறுமதியான ஒரு டோசரின் பகுதிகள் அகற்றப்பட்டு துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. | 2021.07.29 திகதிய உடன்படிக்கை பிரகாரம் அக் கம்பனியின் கோரிக்கை மீது இரண்டு டோசர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த டோசர்கள் நீண்ட காலமாக பயன்படுத்த அல்லது திருத்தியிருக்கவில்லை. அதனால் அந்த டோசர் இயந்திரங்களை மீண்டும் அலுவலகத்திற்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் அகற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் பொருத்தி அவை பாதுகாப்பாக காணப்படுகின்றன. | இந்த இயந்திர உபகரணங்களை பிரயோசனமான கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை விஞ்சி 19 அலுவலர்கள் மிகையாக இருந்ததுடன் 58 வெற்றிடங்கள் காண்பிக்கப்பட்டன. | பிரதிப் பிரதம செயலாளர் நிருவாகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக புதிய நியமனங்கள் மற்றும் இடமாற்றம் ஊடாக மேலதிக 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இத் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர. தேவைப்பாட்டின் பிரகாரம் தொழில்நுட்ப அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.அரச சுற்றறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் எங்கள் திணைக்களத்தின் அமைய/பதில் /தற்காலிக | வெற்றிடங்களை நிரப்பலும் மிகை அலுவலர்களை தேவையான அமைச்சுகளிற்கு மற்றும் திணைகளத்திற்கு இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஊழியர்களிற்காக நிரந்தர நியமனம் வழங்கியுள்ளதுடன் இதற்காக கிழக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தின் வீதி அபிவிருத்தி திணைகளத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு ஊழியர் எண்ணிக்கைக்கு அவர்களை நியமிக்க கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு ஊழியர் எண்ணிக்கை உருவாக்குமாறு நாம் கோருகிறோம். | |

**1.5.13 தலைப்பு– 962 – காணி நிர்வாக திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 13 அரச காணிகளிலிருந்து ரூபா 245,513,346 ஆன வரி 01 முதல் 16 வருடகாலத்திற்கிடையிலான காலத்தினுள் நிலுவை தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், அந் நிலுவை தொகை அறவிடுவதற்கு 2022 திசெம்பர் 31 திகதி வரையும் காணி நிருவாக திணைக்களத்தினால் உரிய செயற்பாடு எடுத்திருக்கவிலலை. | ரூபா 245.51 மில்லியனான அளவில் ஆண்டு 1 முதல் 3 வரை காலத்திற்குரிய நிலுவை தொகை அளவான ரூபா 19.5 மில்லியனான தொகையை நடைமுறை ஆண்டில் அறவிட முடியுமாவதுடன் இந்த நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 3 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய எஞ்சிய நிலுவைத் தொகை ரூபா 225.9 மில்லியனிற்குரிய வாடகை | நிலுவை மீதி விரைவில் குறித்த பிரதேச செயலகமிடமிருந்து அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்வனவு இரத்துச் செய்வதற்கு LCG இற்கு அனுப்பப்பட்டுள்ளது. காணி கட்டளைச் சட்ட இலக்கம் 86.1 பந்தி பிரகாரம் செலுத்தாத குத்தகை நிலுவைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். அவ்வாறே எம்மால் குத்தகைதாரருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது அக் குத்தகை தொகையை செலுத்துமாறாகும். அதன் பிரகாரம் 2023.07.18 திகதி வரை ரூபா 7,304,439.60 தொகை அறவிடப்பட்டது. | |

**1.5.14 நியதிச்சட்டக் கணக்குகள்**

**(அ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2015 ஜுன் 08 திகதியில் தனியார் பேரூந்துகளின் வருகை மற்றும் புறப்படுதல்களை மேற்பார்வை செய்வதற்குரூபா 1.14 மில்லியன்செலவிட்டு GPRS முறைமையுடன் இணைக்கப்பட்ட 13 விற்பனை இயந்திரங்களை (Point of Sale Mechines) மற்றும் 2000 பிரயாணச் சீட்டு உருளைகள்கொள்வனவு செய்திருந்தன. எவ்வாறாயினும், அதனை செயற்படுத்த உரிய மென்பொருள் தொகுதியொன்று இல்லாத காரணத்தால் அந்தப் பொருட்கள் 06 ஆண்டுகளுக்கும் மேலாக காலமாக விளைவற்றிருந்தன. | அதிகார சபையின் தேவைப்பாட்டிற்கு இணங்க OPS இயந்திரத்திற்காக மென்பொருளை அபிவிருத்தி செய்ய அவர்கள் இணங்கியுள்ளனர். அந்த இயந்தரங்களை மென்பொருள்களுடன் வழங்கிய பின்னர் அதிகார சபையினால் திருகோணமலை - மூதூர் பாதையில் 2016 ஜுன் மாதம் ஆரம்ப பயணம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் 2017 ஜுன் மாதம் அதிகார சபைக்கு புதிய மொழிபெயர்ப்பு ஒன்றை விநியோகித்திருந்தனர். அதன் பின்னர் எம்மால் மீண்டும் 2017 ஒக்டோபர் மாதத்தில் திருகோணமலை | மேலதிக காலதாமதமின்றி முறைமையை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | – கந்தளாய் பாதையில் செயற்படுத்தப்பட்டது. மீண்டும் முக்கிய அறிக்கையிடும் உள்ளக முகப்பு செயற்படுவதில்லை என எமக்கு விளங்கியது. மென்பொருளின் இறுதி மொழிபெயர்ப்பு 2023 மே 30 திகதிக்கு முன்னர் எமது சேவரிற்கு ஸ்தாபிக்க அனுப்ப அவர்கள் இணங்கிய போதும் சில Tomcat மற்றும் Java மென்பொருள் பிரச்சினை காரணமாக நாம் கொள்வனவு செய்த டெலிகொம் சேவரை உறுதி செய்யும் வரை நாம் காத்திருக்கிறோம். | |

**(ஆ)சுற்றுலாப் பணியகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 1985 இலக்கம் 15 கொண்ட திருத்திய ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம், எந்த ஒரு மாதத்திற்கும் உரிய அங்கீகார சேமலாப நிதியம் அல்லது அங்கீகார பங்களிப்பு ஓய்வூதியம் அந் நிதியத்திற்கு அல்லது உத்தேச திட்டத்திற்கு அடுத்த மாதம் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டும். அப்பங்களிப்புத் தொகையை காலரீதியாக செலுத்தத் தவரினால் அதற்காக மிகை அறவீட்டை செலுத்த கடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் முதல் 2021 ஜூன் 30 வரையான காலத்தினுள் ஒப்பந்த அடிப்படையில் பணியகத்துக்கு ஆட்சேர்த்திருந்த ஆளணிக்காக மேற் குறித்த நிதியத்திற்கு,பங்களிப்பு செலுத்தஇயலாத காரணத்தால், மிகையறவீடு மற்றும் நிலுவை கொடுப்பனவாக ரூபா 1,174,556 ஆன தொகையை 2022 ஆண்டில் செலுத்தியிருந்தது. | கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தை தொடங்கிய ஆரம்ப காலத்தில் பணியகத்திற்கு ஆட்சேர்த்த தற்காலிக ஊழியர்கள் தொடர்பில் இந்த நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படவில்லை. ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆளணியினரையும் அங்கீகரித்திருக்கவில்லை. இது தொடர்பாக தொழிலாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர் நிலுவை மற்றும் மிகையறவீடு செலுத்தப்பட்டுள்ளது. தற்போது ETF மற்றும் | கவனயீனத்தால் செலுத்தப்பட்ட மிகையறவீட்டை உரிய அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | EPF செலுத்துதல் வழமையாக செலுத்தப்பட்டு வருகிறது. | |
| (ii) | கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா கைத்தொழிலை முன்னேற்றி மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக விசேட அபிவிருத்திக்கான கொடைகளின் கீழ் ரூபா 22.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந் நடவடிக்கை 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதும் 2023 மார்ச் 31 அளவிலும் பூர்த்தி செய்து இருக்காததால் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா வியாபாரத் துறை மேம்படுத்தும் அளவிற்கு எதிர்பார்த்த சுற்றுலா சேவைகள் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | இப்பணி தொடர்ந்து மேற்கொண்டு செல்லும் பணியாகையால் மீளாய்வாண்டிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | குறித்த காலத்தினுள் இந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (iii) | ஜெட்டி (Jetty Project) கருத்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவ் வேலைகள் 2021 சனவரி மாதத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும் 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஜெட்டி அலங்காரமிடல் மற்றும் சுற்றுலா கவர்ச்சியான இடமாக மேம்படுத்துவதற்காக ரூபா 4.0 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டது. இதற்காக சிவில் நிர்மாண நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்க அங்கீகாரம் பெறப்பட்டது. எவ்வாறாயினும், நிதிப் பிரச்சினை காரணமாக மூலதன நிதியம் இல்லாத காரணத்தால், பிரதான செயலாளரினால் இலக்கம் EP/PL/08/AIP/2022 மற்றும் 2022.07.05 திகதிய அவரின் கடிதம் மூலம் கையிறுப்பிள்ள பட்டியல்கள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளிற்கு முன்னுரிமை வழங்குமாறும், புதிய வேலைகள் எதனையும் செயற்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (இணைப்பு 1) அவ்வாறான நிலைமையின் கீழ் இதனை தொடர்ச்சியான | கருத்திட்டத்தை திட்டமிடலை சாத்தியப்பாட்டு ஆய்வொன்றுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயலொன்றாக முன்கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டது. | |

**(இ)முன்பள்ளி கல்வி பணியகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்ளுடன் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தப்படவில்லை. | பணியகத்தின் நிதிக்கூற்று அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பணியகத்தினால் பின்பற்றிய கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,606,364 பெறுமதியான நிலையான சொத்துக்களிலிருந்து ரூபா 1,776,835 ஆன சொத்துக்கள் மாத்திரம் பெறுமானத் தேய்வு செய்திருந்ததால் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கம் ரூபா 697,532 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பணியகத்தின் நிதிக்கூற்று கடந்த ஆண்டு நிதிக்கூற்று பிரகாரம் தயாாரிக்கப்பட்டுள்ளது.எதிர் காலத்தில் இந்த விடயத்தை சரி செய்வதாக அறிவிக்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | முன்பள்ளி பணியகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கிய (05) ஐந்து மோட்டார சைக்கில் கள அலுவலர்களால் மீள் ஒப்படைக்காது ஒராண்டுக்கு அதிக காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இந்த 03 மோட்டார் சைக்கிள்களின் வாகனப் பதிவு சான்றிதல் இல்லாது பயன்படுத்துவதனை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் போதிய பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டியதுடன் பயன்பாட்டிற்கு எடுக்க முடியும் என உறுதிப்படுத்த வேண்டும். |